- பரிசோதனை பெற்றோர் / நம்பிக்கைக்குரியவர் முன்னிலையில் நடக்க வேண்டும்.

### நீதிமன்ற நடைமுறைகள்

- வழக்கு விசாரணை உள்ளரங்கமாக (in camera) நடத்தப்பட வேண்டும்.
- குழந்தையின் சாட்சியம் 30 நாட்களுக்குள் பதிவு செய்யப்பட வேண்டும்.
- வழக்கு ஒரு ஆண்டுக்குள் முடிக்கப்பட வேண்டும்.
- குழந்தை நேரில் குற்றவாளியை காணாமல் வாக்கு மூலம் அளிக்கலாம் (திரைச்சீலை / வீடியோ வழி).
- குழந்தையிடம் கேள்விகள் நீதிமன்றம் மூலமாக மட்டுமே கேட்கப்பட வேண்டும்.

### குழந்தை நலக் குழுவின் பங்கு

- குழந்தைக்கு பாதுகாப்பான இடம் ஏற்பாடு செய்தல்.
- மூன்று நாட்களுக்குள் குழந்தை எங்கு வைக்கப்படவேண்டும் என்று முடிவு செய்தல்.
- பெற்றோர் குற்றவாளி என்றால், குழந்தைக்கு இலவச சட்ட உதவி வழங்கப்படுவதை உறுதிசெய்தல்.



### ஊடகங்களின் கடமைகள்

- குழந்தையின் அடையாளம் (பெயர், முகவரி, புகைப்படம், பள்ளி) வெளியிடக் கூடாது.
- குழந்தையின் கண்ணியத்தை குலைக்கும் வகையில் செய்திகள் வெளியிடக்கூடாது.

### சமூகத்தின் பொறுப்பு

- குழந்தைகள் துன்புறுத்தப்படுவதைப்பற்றி பேசுங்கள், விழிப்புணர்வு ஏற்படுத்துங்கள்.
- பள்ளிகள், விடுதிகள், நல அமைப்புகளில் குழந்தைப் பாதுகாப்பு கொள்கை இருக்கிறதா என்பதை உறுதி செய்யுங்கள்.
- ஒரு குழந்தை கூறும் புகாரை எப்போதும் முக்கியத்துவம் தந்து கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எப்போதும் அவர்கள் கூறுவதை புறம் தள்ளாதீர்கள். அனைத்து நடவடிக்கைகளின் போதும் குழந்தைக்கு உங்களின் மென்மையான ஆனால் உறுதியான ஆதரவை வழங்குங்கள் (பதற்றமடையத் தேவையில்லை).

**மேலும் விரிவான தகவல்களை அறிந்துகொள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்**

அவசர உதவி எண்கள்

**அரசு உதவி எண்: 1098**

**சிறகுகள் உதவி எண்:**

______________________________

சிறகுகள்

## தனித்து வாழும் பெண்கள் செயல்பாட்டுக் கூட்டமைப்பு (SWAN)

# குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம், 2012



**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு**

M: +91 8660891451 | E: swan@hrf.net.in | W: hrf.net.in

**அறிமுகம்**

பாலியல் குற்றங்களிலிருந்து 18 வயதிற்கு கீழ் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் முழுமையாகப் பாதுகாக்கவும், பாதிக்கப்பட்ட குழந்தைகளின் உரிமைகள், நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யவும் இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

**குழந்தைகளுக்கான பொதுவான உரிமைகள்**

- **அடையாள ரகசியம் காத்தல்:** குழந்தையின் பெயர், முகவரி போன்ற விவரங்கள் வெளியிடப்படக் கூடாது.
- **துணையாக யாரையாவது வைத்துக்கொள்ளும் உரிமை:** வழக்கு நடவடிக்கைகளில் பெற்றோர் / பாதுகாவலர் / நம்பிக்கைக்குரிய ஒருவரைத் துணையாக வைத்துக்கொள்ள உரிமை உண்டு.
- **சைகை மொழி / மொழிபெயர்ப்பு உதவி:** தேவையெனில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு சைகை மொழி விளக்கமளிப்பவர் அல்லது சிறப்பு ஆசிரியரை வைத்துக்கொள்ளலாம்.
- **குற்றம் சாட்டப்பட்டவரை நேரில் காணாமல் இருப்பது:** வாக்குமூலம் வழங்கும்போதோ/இதர விசாரணையின் போதோ குழந்தையின் முன் குற்றவாளியை நிறுத்தக்கூடாது.
- **அபராதம் விதிக்கப்படாமல் இருப்பதற்கான உரிமை:** குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் செய்யவில்லை என்று தெரியவந்தால் அதற்காக குற்றம் சாட்டிய குழந்தைக்கு அபராதம் விதிக்கக்கூடாது.
- **தகவல் பெறும் உரிமை:** பாதிக்கப்பட்டவருக்கு வழக்கின் நிலை, பாதுகாப்பு இல்லம், ஆதரவு தேர்வு போன்ற விஷயங்களில் தகவல் பெற உரிமை உண்டு.
- **சட்ட ஆலோசனை உரிமை:** குழந்தைக்கு இலவச சட்ட உதவி மற்றும் வழக்கறிஞர் பெறும் உரிமை உண்டு.
- **இழப்பீடு பெறும் உரிமை:** உடல், மன உளைச்சல், மறுவாழ்வு போன்றவற்றிற்கு இழப்பீடு பெறலாம்.
- **குற்றம்சாட்டப்பட்ட குழந்தைக்கு உரிமை:** குழந்தை குற்றவாளி என்று குற்றம் சாற்றப்பட்டால், அதன் பிறகு அந்தக் குழந்தை சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும். போஸ்கோ சட்டத்தின்படி எந்த ஒரு குழந்தையும் குற்றம் சாட்டப்படக்கூடாது.

**சிறுமிகளுக்கான சிறப்பு உரிமைகள்**

- மருத்துவ பரிசோதனை பெண் மருத்துவரால் மட்டுமே செய்யப்பட வேண்டும்.
- பரிசோதனை பெற்றோர் / நம்பிக்கைக்குரியவர் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும்.

**மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான உரிமைகள்**

- வாக்குமூலம் குழந்தை விரும்பும் இடத்தில், சைகை மொழி விளக்கமளிப்பவர் முன்னிலையில் பதிவு செய்யப்பட வேண்டும்.



- வீடியோ பதிவு கட்டாயம்.
- அடையாளம் காணும் நடைமுறைகள் குழந்தைக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.

**சந்தேகிக்கப்படும் பாலியல் குற்றம் குறித்து மக்கள் செய்ய வேண்டியது**

- சம்பவம் நடக்கலாம் என்ற சந்தேகம் இருந்தாலும் உடனடியாக சிறார் காவல் பிரிவு / காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும். புகார் அளித்த பிறகு நீங்கள் பாதுகாக்கப்படுகிறீர்கள் (அத்தகைய எச்சரிக்கை தவறானதாக இருந்து நீங்கள் குற்றம் சாட்டியவர் குற்றம் செய்யவில்லை என்று தெரிந்தாலும்) நல்ல எண்ணத்தின் அடிப்படையில் நீங்கள் அளித்த புகாருக்காக உங்கள் மீது எந்த ஒரு குற்ற அல்லது சிவில் வழக்கோ பதிவு செய்யப்படக்கூடாது.
- புகார் அளிக்காவிட்டால் தண்டனை உண்டு.

**காவல்துறையின் பொறுப்புகள்**

குழந்தையின் வாக்குமூலம் சீருடை அணியாதப் பெண் அதிகாரியால் பதிவு செய்யப்பட வேண்டும்.

**24 மணி நேரத்துக்குள் செய்யவேண்டியவை :**

- குழந்தை நலக்குழுவிடம் தகவல் அளிக்க வேண்டும்.
- தேவையானால் பாதுகாப்பு இல்லம் / மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும்.
- புகார் அளித்தவருக்கு FIR நகல் இலவசமாக வழங்க வேண்டும்.
- குழந்தையை குற்றவாளியின் முன்னிலையில் நிறுத்தக்கூடாது.

**மருத்துவ உதவி**

- அவசர மருத்துவ சிகிச்சை உடனடியாக வழங்கப்பட வேண்டும்.
- குழந்தை பெண் குழந்தையெனில் பரிசோதனை பெண் மருத்துவரால் மட்டுமே செய்யப்பட வேண்டும்.